1993 ஏப்ரல் 15]

பின்னர், போக்குவரத்துக் கழக ஊழியர்கள் ஊதிய ஒப்பந்தப்படி ஊதியம் நிர்ணயிக்கப்படுவதால், அதனை ரத்துசெய்து 5 விழுக்காடு மலைப் பகுதிப்படி மட்டும் வழங்கப்படுகிறது.

(ஆ) மலைப்பகுதியில் பணிபுரியும் இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம், சேரன் போக்குவரத்துக் கழகம் மற்றும் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் போன்ற மற்ற அரசு போக்குவரத்து கழக ஊழியர்களுககும் மலைப்பகுதிப்படி வழங்கப் படுகிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் வெங்கடராம ரெட்டி என்னிடத்திலே சொன்ன காரணத்தினால் இந்தக் கேள்வியை, நான் தொடர் கேள்வியாக கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கப்படுகிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் அங்கே வழங்கப்படவில்லையென்று தெரிகிறது. அதை மீண்டும் பரிசீலனை செய்து, அது வழங்கப்படவில்லையென்றால், சரி செய்து உடனடியாக வழங்குவதற்கு முயற்சி எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 விழுக்காடுகள் என்பது அரசு அலுவலர்களுக்குப் பொருந்தும். ஆனால், போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு 5 விழுக்காடுகள் இப்பொழுது வழங்கிக் கொண்டிருக்கிறோம். அதற்குக் காரணம் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அவர்களுடைய ஊதிய ஒப்பந்தம் பற்றி பேசுகிறபோது 5 விழுக்காடுகள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு அலுவலர்களுக்கு உள்ள விதிகள் இந்தப் போக்குவரத்துக் கழகத்திற்குப் பொருந்தாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 346, திரு. கு. லாரன்ஸ், திரு. ம. சின்னசாமி மற்றும் திரு. என். ஆர். சிவபதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

346—

சென்னை—கன்னியாகுமரிக்குக் கப்பல் போக்குவரத்து.

*10748—திரு. கு. லாரன்ஸ் :

திரு. ம. சின்னசாமி :

திரு. என். ஆர். சிவபதி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்கு பயணிகள் ஏற்றிச் செல்லும் கப்பல் போக்குவரத்து ஏற்படுத்த மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா ?

[1993 ஏப்ரல் 15

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்கு பயணிகள் ஏற்றிச் செல்லும் கப்பல் போக்குவரத்து ஏற்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சருடைய கனிவான பதிலுக்கு எங்களுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். பொதுவாக வளரும் நாடுகளில் தரை மார்க்கமாகவும், ஆகாய மார்க்கமாகவும், அத்துடன் தண்ணீர் மார்க்கமாகவும், போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. நம் நாட்டைப் பொறுத்தவரையில் அவை குறைச்சலாக இருக்கிறது. எனவே, புத்தம் புதுப்பொலிவுடன் புதுமைகளைச் செய்யும் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் பல்வேறு தமிழகத்தினுடைய சிறிய சிறிய துறைமுகங்களை இணைக்கின்ற விதமாக இந்தப் போக்குவரத்து வசதிகள் மேம்படுத்தப்படுமா, கப்பல் போக்குவரத்து வசதிகள் மேம்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படகுப் போக்குவரத்து என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அதிலே பல்வேறு இடர்ப்பாடுகள் இருக்கின்றன. கரையோரங்களிலே பயணம் செய்கின்ற பயணிகளுக்காக தொலைபேசிக் கருவிகள் வேண்டியிருக்கிறது. அதைப் போல அதனுடைய வேகம் ஏறத்தாழ மணிக்கு 30 கிலோ மீட்டர் தான் செல்கிறது. அதைப் போல அந்தப் படகுகளை ஓட்டுவதற்குத் தேர்ச்சி பெற்றவர்கள் இந்தியாவிலே இல்லை. வேறு நாட்டிலேயிருந்து தான் தேர்ச்சி பெற்றவர்களைப் பெறவேண்டியிருக்கிறது. ஆகவே, இதைக் கருத்திலேகொண்டு தான் தனியார் மூலமாக வேறு நாடுகளிலேயிருந்து இந்தப் படகு போக்குவரத்துக் கழகத்தை உருவாக்கலாமா என்பதை நாங்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அது போன்ற செயற்குறிப்புகள் நம்முடைய அரசுக்கு வந்திருக்கின்றன. ஆகவே, அதைக் கருத்திலே கொண்டு இந்த ஆண்டு பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து கன்னியாகுமரி செல்வதற்கு குறைந்தது 14 மணி நேரம் ஆகிறது. அதோடு நேரம் ஒரு பக்கம் இருந்தாலும், பயணிகளுக்கு மனநிறைவு அளிக்கும் பயணமாக அமைவதில்லை. இந்தக் கப்பல் போக்குவரத்தைச் செய்து கொடுத்தால் பயணிகளுக்கு நேரம் குறைவதோடு, உல்லாசச்

1993 ஏப்ரல் 15]

பயணமாக அமையும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இத்தகையப் போக்குவரத்து பரிசீலனையில் உள்ளது என்று சொன்னார்கள். ஆகவே, இந்தப் போக்குவரத்து எவ்வளவு நாளில் துவங்கும் என்பதையும், விரைவிலேயே துவங்கினால் இந்தப் பயணிகளுக்கு ஏதுவாக இருக்குமென்பதை மனதிலே கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி உடனடியாகத் தொடங்குவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கப்பல் போக்குவரத்தைப் பொறுத்தவரையில் இரயில் கட்டணத்தைக் காட்டிலும், பஸ் கட்டணத்தைக் காட்டிலும் உயர்ந்திருக்கிற காரணத்தால்தான் அதை நாம் இயக்க முடியவில்லை. அது இலாபத்தில் இருக்காது என்ற காரணத்தால்தான் அரசுத் துறையின் சார்பாக இயக்க முடியவில்லை. தனியார் அதற்கு முன்வருவார்களேயானால் அதற்கு அரசு முன்னுரிமை தந்து அவர்களுக்கு அனுமதி தரலாம் என்று கருதிக்கொண்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 14 மணி நேரம் சென்னையிலே இருந்து காரிலே செல்கிறபோது பல்வேறு இடர்பாடுகள் இருக்கின்றன என்பதை இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். ஆனால் கப்பலிலே பயணம் செய்கிறபோது ஏறத்தாழ அதற்கு 36 மணி நேரம் ஆகும் என்பதையும் அவர்கள் புரிந்து கொண்டாக வேண்டும். ஆகவே இதைக் கருத்தில் கொண்டுதான் இங்கே சுற்றுலாப் பயணிகள் வருகிறபோது மட்டும் பக்கத்தில் இருக்கின்ற அதாவது சென்னைக்கு அருகே இருக்கின்ற மாமல்லபுரம், பாண்டிச்சேரி, கடலூர் போன்ற பகுதிகளுக்குச் செல்வதற்கும் அதைத் தொடர்ந்து அவர்கள் கன்னியாகுமரி வரையிலும் செல்வதற்கும் சுற்றுலாத் துறையின்மூலம் ஏற்பாடு செய்வது குறித்து பரிசீலிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை .

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரியில் சின்னமுட்டம் மீன் பிடித்துறைமுகம் உள்ளது. அது போல் விவேகானந்தர் மண்டபத்திற்குச் செல்லும் படகுப் போக்குவரத்தும் தற்போது செயல்பட்டு வருகிறது. அதேபோல் சரித்திரப் புகழ்வாய்ந்த வட்டக்கோட்டைப் பகுதியில் கப்பல் போக்குவரத்து விடுவதற்கான வசதிகள் உள்ளன. எனவே இப்படிப் பல வசதிகள் நிறைந்துள்ள பகுதியான கன்னியாகுமரியிலிருந்து சென்னைக்குக் கப்பல் போக்குவரத்து அரசு சார்பிலோ அல்லது தனியார் மூலமாகவோ அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் இதனை அரசு விரைவில் செய்து தர முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலும் கன்னியா குமரியிலும் அந்த வசதிகள் இருக்கின்றனவே தவிர இடையிலே அந்த வசதிகள் இல்லை. ஆகவே தான் அரசு பரிசீலித்துக்கொண் டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 347, திருமதி கவிநிலவு தர்மராஜ்............ (குறுக்கீடு)

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் க்ளாரிஃபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆஃப் க்ளாரிஃபிகேஷன், பாயின்ட் ஆஃப் ஆர்டர் எல்லாம் கேட்கக்கூடாது. உட்காருங்கள்

வினா எண் 347, திருமதி கவிநிலவு தர்மராஜ், இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) அவருக்குப் பதிலாக டாக்டர் எஸ். சுந்தர ராஜ் கேட்கிறார். மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்.

347—

நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்தல்.

*12246—திருமதி கவிநிலவு தர்மராஜ் :

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் வேலை வாய்ப்புத் துறை மூலமாக நியமிக்கப்பட வேண்டுமென அறிவுரை வழங்கப் பட்டுள்ளது. அவ்வாறு நியமிக்கப்பட்ட பணியாளர்களின் பணியை நிரந்தரம் செய்ய ஏற்கனவே வழிமுறைகள் உள்ளன.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாளர்கள் வேலைவாய்ப்புத்துறையின் மூலம் நியமனம் செய்யப்படவேண்டும் என்று அறிவுரை வழங்கி யுள்ளதாக அறிவித்தார்கள். ஆனால் அங்கே வேலை பார்ப்ப வர்கள் பணி நிரந்தரம் வேண்டி, அதாவது அவர்களுக்கு